பணியில் குறைபாடுகள் இருந்தால், ஜனநாயக முறையில் எடுத்து வைப்பதும் எங்களுடைய கடமை என்கிற விதத்தில், அந்த அடிப்படையில்தான், காங்கிரஸ் கட்சியின் சார்பாக, நல்லவைகளை வரவேற்றும், இருக்கிற குறைகளை எடுத்துச்சொல்லியும், ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியாக இருந்து செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது 2.19 மணியாகிவிட்டது. நீங்கள் நாளை தொடர்ந்து பேசி, அதற்குப் பிறகு பதிலுரையை வைத்துக் கொள்ளலாம். நாளை திரு. செல்வராஜ் அவர்கள் தொடருவார்கள். நாளை கேள்வி நேரத்தை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். உறுப்பினர்கள் ரொம்ப அவசரத்தில் இருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 19.4.1994 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

எனக்கோருகிறேன்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பேரவை மீண்டும் நாளை (19.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்–
ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

90. மானியக் கோரிக்கை எண் 51–தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

91. மானியக் கோரிக்கை எண் 17–கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS